| 11. | திரு.S.திருக்குமார் | (UK) |
| 12. | திரு.k.ரகுநாதன் | (நெதர்லாந்து) |
| 13. | திரு.E.கதிரவேலு | (கொழும்பு) |
| 14. | Ashli (Rice மில) | (வவுனியா) |
| 15. | N.S.ரட்ணம் | (வவுனியா) |
| 16. | லக்ஸ்மன் ரேடர்ஸ் | (வவுனியா) |
| 17. | சிவாபிரதாஸ் | (வவுனியா) |
| 18. | மகாலட்சுமி மில் | (வவுனியா) |

| | | |
|---|---|---|
| 19. | கிருபா ஸ்டோர்ஸ் | (வவுனியா) |
| 20. | திருமதி.S.ஜெயகாண்டீபன் | (வவுனியா) |
| 21. | திரு.S.கணேசன் | (வவுனியா) |
| 22. | திரு.J.செல்வரட்ணம் | (வவுனியா) |
| 23. | திரு.V.சுப்பிரமணியம் | (வவுனியா) |
| 24. | திருமதி.S.காயத்திரி | (வவுனியா) |
| 25. | Dr.சிவராஜா | (வவுனியா) |
| 26. | திரு.M.நாகலிங்கம் | (வவுனியா) |
| 27. | திருமதி.J.பரமநாயகம் | (வவுனியா) |
| 28. | திரு.C.C. தணிகாசலம் | (வவுனியா) |
| 29. | திரு.S.சிவபாலன் | (வவுனியா) |

| **பொருட்கள் வழங்கியவர்கள்.** | **பொருட்கள்** |
|---|---|
| 01. J.R.S வவுனியா நிறுவனம். | சீருடை |
| 02. திரு.S.ஜெயகுகன் | வலைபந்தாட்ட கம்பம், இலக்குக் கம்பங்கள். |



இவ்வருடம் முழுவதும் பயிற்சி நிலையம் இயங்குவதற்கு உத்தேசித்துள்ள மொத்தச் செலவீனம் 4,218,580.00 ரூபாவாகவிருந்த போதிலும் மேற்குறித்த காரணங்களால் எமக்கு ஏற்பட்ட உண்மைசெலவீனம் 4,301,550.84 ரூபாயாக உள்ளது. செலவீனங்கள் தொடர்பான விபரங்கள் கீழ் உள்ள அட்டவணை விபரிக்கின்றது.

## 2009ம் ஆண்டுக்கான மொத்த செலவீனம்

| விபரம் | தொகை |
|---|---|
| 01. பாடவிதான, இணைபாடவிதான செயற்பாடு | 127,904.00 |
| 02. உணவும் சிற்றுண்டி | 475,037.50 |
| 03. மருத்துவச் செலவு | 55,003.00 |
| 04. போக்குவரத்து | 927,148.39 |
| 05. சம்பளங்கள் | 1,128,580.00 |
| 06. தொடர்பாடல் | 79,464.42 |
| 07. கட்டிட நிர்மாணம் | 808,847.15 |
| 08. ஆவணம் | 61,245.00 |
| 09. பயிற்சி | 86,413.00 |
| 10. ஏனையவை | 18,986.80 |
| 11. மூலதனச் செலவு | 219,954.75 |
| 12. நிர்வாகச் செலவு | 312,966.83 |
| **மொத்தம்** | **4,301,550.84** |



## 2.0 பயிற்சியுடன் தொடர்புடைய செயற்பாடுகள்

### 2.1 மாணவர்களின் வருகை

பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் அனைத்து மாணவர்களும் வழமையாக காலை 8.45 மணியளவில் பயிற்சி நிலையத்திற்கு சமூகமளித்திருந்தனர்.



### 2.2 காலை உணவு வழங்கல்

மாணவர்களின் கற்றல் தொடர்பான செயற்பாடுகளுக்கு காலை உணவு முக்கிய பங்கு வகிக்கின்றது. அந்த வகையில் இப் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு காலை உணவு வீட்டிலிருந்து கொண்டு வருவது வலியுறுத்தப்பட்டிருந்தது: இவர்களுக்கு பயிற்சி நிலையத்தில் காலை 8.45 தொடக்கம் 9.15 வரை காலை உணவுக்கான நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் கீழ்வரும் நன்மைகளை பெறக்கூடியதாக இருந்தது.



01. மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து பகிர்ந்துண்ணும் பழக்கம் ஏற்பட்டுள்ளது.


02. தமது இயலுமைக்கு ஏற்ப தமது உணவை தாமே உண்ணும் பயிற்சி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

03. பிள்ளை சிறந்த ஊட்ட உணவை உட்கொள்வதை வளவாசிரியர்கள் உறுதிப்படுத்தல்.

04. பிள்ளை தொடர்பாக பெற்றோரின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தல்.

**2.3 காலை வழிபாடும் ஒன்று கூடலும்.**

மாணவர்கள் சமய ஒழுக்கங்களை பின்பற்றி மனம் அமைதியையும், புத்துணர்ச்சியும் பெற்று அன்றை நாளினை இறைவனிடத்தில் பொறுப்புக் கொடுப்பதற்காக காலை வழிபாட்டில் இந்துமத வழிபாடும், கிறிஸ்தவ மத வழிபாடும் இணைந்து நடாத்தப்பட்டன. பின்னர் நற்சிந்தனை, திருக்குறள், ஆத்திசூடி என்பன கூறுவதற்கும் இசையுடன் கூடிய உடல் அப்பியாசங்களை செய்வதற்கு அன்றைய மாணவ தலைவர் தலமையின் கீழ் செயற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன இறுதியாக ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கப்படும் பாடசாலைக்கீதத்துடன் மாணவர்களும் இணைந்து பாடப்படும் நிகழ்வுடன் காலை வழிபாடும் ஒன்று கூடலும் நிறைவுபெற்றன.



## 2.4 நாளாந்த வாழ்வியல் பயிற்சி

மாணவர்கள் தமக்கு நாளாந்தம் தேவைப்படும் தேவைகளை தாமே பூர்த்தி செய்து கொள்வதற்காக அவர்களுக்கு குறித்த சில நாளாந்த வாழ்வியல் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் பல் துலக்குதல், தலை வாருதல், உடையணிதல், முகம் கழுவுதல், உணவு உண்ணும் பாத்திரங்களை கழுவுதல், தமது



காலணிகளை கழற்றுதல், மீள அணிதல் போன்ற செயற்பாடுகள் பயிற்சி அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இப்பயிற்சிகள் வழங்கப்படும் போது மாணவர்களின் சுத்தம் அவதானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 2.5 பால் வழங்கல்

சிறார்களுக்கு நிறை உணவு இன்றியமையாது வழங்கப்பட வேண்டும். நிறையுணவு வகையில் பால் உள்ளடக்கப்பட்டுள்ளதால்




மருத்துவரின் ஆலோசனை மற்றும் பிள்ளையின் விருப்புக்கு இணங்க ஒவ்வொரு பிள்ளைக்கும் தினமும் காலை 11.15 மணியளவில் 175ml பால் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் வைத்தியரின் ஆலோசனைக்கு இணங்க இரண்டு மாணவர்களுக்கு

பால் வழங்கப்படவில்லை.

**2.6 கல்விக்குட்பட்ட குழுவிற்கான பயிற்சிகள்**

கல்விக்குட்பட்ட குழுவிற்கு செல்வி மகேஸ்வரன் வான்விழி மகேஸ்வரன் வகுப்பாசிரியராக இருந்துள்ளார். இக்குழுவில் உள்ள மாணவர்களின் விவேக ஈவு 50 தொடக்கம் 70 ஆக உள்ளது. இவர்களின் விவேக ஈவின் அடிப்படையில் கற்பித்தல் நுட்பங்கள் தெரிவு செய்யப்பட்டு எண், எழுத்து, இசையும் அசைவும், மனைவேலை, யோகாசனம், சித்திரம் போன்ற பயிற்சிகள் நேரசூசியின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.



**2.7 பயிற்சிக்குட்பட்ட குழவிற்கான பயிற்சிகள்.**



இக்குழுவில் 17 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களை செல்வி சாந்தி தங்கவேல் பொறுப்பேற்றிருந்தார். அத்துடன் இக்குழுவிலுள்ள மாணவர்களில் விவேக ஈவு 35 தொடக்கம் 49 வரை உள்ளது. கல்விக்குட்பட்ட குழுக்களுக்குரிய பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தாலும்

இவர்களின் விவேக ஈவின் அடிப்படையில் பயிற்சி அளிக்கப்படும் நுட்பத்தில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

### 2.8 பாதுகாப்புக் குழுவிற்கான பயிற்சிகள்

தீவிர, அதிதீவிர மனவளர்ச்சி குறைபாடு உடைய மாணவர்களை உள்ளடக்கிய பாதுகாப்பு குழுவில் 32 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களின் விவேக ஈவு 34 - 0 வரை உள்ளதனாலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதனாலும் திருமதி ஜீவதயாழினி இராமசாமி, திருமதி. தோமஸ் எலிசபெத் ஆகிய இரண்டு வளவாசிரியர்கள் இக்குழுவினைப் பொறுப் பாற்றியிருந்தனர்.



நாளாந்த வாழ்வியல் பயிற்சியுடன் இவர்களுக்கு இசையும் அசைவும், பாலர்பாடல், யோகாசனம், உடல் அப்பியாசங்கள் ஆகிய பயிற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இவர்களின் மனநிலையில் மகிழ்ச்சியினை ஏற்படுத்துவதற்கு வள ஆசிரியர்கள் முன்னுரிமை வழங்கியுள்ளனர்.

### 2.9 வளர்தவணை மதிப்பீடு

விசேட கல்வி நிபுணர்களால் விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களுக்கென தொகுக்கப்பட்ட 210 செயற்பாடு அடங்கிய வளர்தவணை மதிப்பீடு கோவையின் அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு ஒவ்வொரு தவணையும் இக்கோவையின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து வளர்தவணைப்

படிவங்களில் பதிவு செய்து பெற்றோர் கூட்டங்களில் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இவர்களின் விவேக ஈவின் முன்னேற்றத்திற்கேற்ப ஒரு குழுவிலிருந்து இன்னொரு குழுவிற்கு வகுப்பேற்றப்பட்டுள்ளனர்.

### 2.10 மதிய போசனம் வழங்கல்

வைத்தியர்களாலும், பொது சுகாதாரப் பரிசோதகர்களாலும் பரிந்துரைக்கப்பட்ட திட்டவட்டமான உணவு அட்டவணையின் ஊடாக மாணவர்களுக்கு மதிய போசனம் தயாரித்து வழங்கப்பட்டுள்ளது. நிலையத்தில் மதிய போசனம் வழங்கப்படுவதன் நோக்கம் கீழ் வரும் காரணங்களைக் கருத்தில் கொண்டே ஆகும்.



01. மாணவர்கள் ஊட்டமான மதிய போசனம் உட்கொள்வதை உறுதிப்படுத்தல்
02. மாணவர்களின் வதிவிடங்கள் சேய்மையில் அமைந்திருந்தமை
03. மதிய உணவு உட்கொள்வதற்கான பயிற்சியினைப் பெறுதல்.

### 2.11 மாணவர்கள் வீடு திரும்புதல்

பிள்ளை பெற்றோருடனும் சமூகத்துடனும் ஒன்றித்திருக்க வேண்டும் என்பதற்காகவும் பெற்றோரும் சமூகத்தாரும் பிள்ளையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற காரணத்தாலும் மாணவர்களுக்கான பயிற்சிகள் முடிந்தவுடன் பிற்பகல் 2 மணிக்கு தாம் பயிற்சி நிலையத்திற்கு வரும் அதே ஒழுங்கில் தமது வதிவிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## 3. மருத்துவப் புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள்

பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் கீழ்வரும் மருத்துவப் பரிசோதனைகள் வருட ஆரம்பத்தில் நடைபெற்று பெறுபேறுகள் தனியான மாணவர் சுயவிபர கோவையில் பாதுகாக்கப்படுகின்றது.

### 3.1 வருடாந்த மருத்துவ பரிசோதனை

1. வருடாந்த மருத்துவப் பரிசோதனை
2. வருடாந்த போஷாக்கு மதிப்பீடு
3. வருடாந்த உடற்கூற்றியல் பரிசோதனை
4. வருடாந்த விவேக ஈவு மதிப்பீடு

### (அ) வருடாந்த மருத்துவப் பரிசோதனை

வருட ஆரம்பத்தில் அனைத்து மாணவர்களுக்கும் உடலியல் ரீதியாக முழுப்பரிசோதனை ஒன்று நடைபெறுவது வழக்கம். அந்த வகையில் இவ்வருடம் வவுனியா பொது வைத்தியசாலையில் குழந்தைப் பிரிவில் கடமையாற்றிய Dr.அபயவிக்கிரம அவர்களால் 48 மாணவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இவரின் வேண்டுகோளுக்கு இணங்க 32 மாணவர்கள் மேலும் விசேட பரிசோதனைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். பரிசோதனை விபரம் கீழ்வரும் அட்டவணையில் காட்டுகின்றது.



அட்டவணை – 7

**மேலதிக விஷேட மருத்துவப் பரிசோதனை**

| பரிசோதனை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| இரத்தப் பரிசோதனை | 03 |
| பல் பரிசோதனை | 05 |
| கண் பரிசோதனை | 08 |
| காது பரிசோதனை | 04 |
| தைரொட்சின் பரிசோதனை | 11 |

**(ஆ) வருடாந்த போஷாக்கு மதிப்பீடு**

மாணவரின் போஷாக்கு மட்டத்தினை கணிப்பீடு செய்வதன் மூலம் அவர்களின் உணவு வகைகள், உணவின் அளவு என்பன தீர்மானிக்கப்படுகின்றது. அந்த வகையில் இவ்வருட ஆரம்பத்தில் போஷாக்கு மதிப்பீடு வவுனியா M.O.H அலுவலகத்தினூடாக தவசிகுளப் பிரிவில் கடமைபுரியும் P.H.I திரு கேதீஸ்வரன் அவர்களால் 48 மாணவர்களின் உடற்பருமன்சுட்டி. கணிப்பிடப்பட்டு அவர்களுக்குரிய உணவு நடைமுறைகள் ஆலோசனைகள் வழங்கப்பட்டனர்.

1. அனைத்து போசனை பதார்த்தங்களும் உள்ளடங்கிய உணவு அட்டவணைப்படி அளவு பரிமாணத்தில் மதிய உணவு வழங்கல்.

2. போஷாக்கான காலை உணவினை வீடுகளிலிருந்து கொண்டு வந்து வளவாசிரியரின் கவனத்தின் கீழ் உண்ணுதல்.

3. மாணவர் ஒவ்வொருவருக்கும் 175ml பால் வழங்குதல்.

4. நிலையத்தில்தயாரிக்கப்படும் பஞ்சப் போஷனத்தினை (பயறு, உழுந்து, எள்,சிவப்பு குத்தரிசி, சோளம்) மாணவருக்கு அளவு பரிமாணத்தில் வழங்குதல்.

5. வைத்தியரின் பரிந்துரைக்கப்பட்ட போஷாக்கு மருந்துகளும், மாத்திரைகளும் வழங்குதல்.

**(இ) வருடாந்த உடற் கூற்றியல் மீள் பரிசோதனை**

அங்கசைவு பாதிக்கப்பட்ட 7 மாணவர்களுக்கு உடற் கூற்றியல் பயிற்சி வவுனியா பொது வைத்திய சாலையில் பணிபுரியும் உடற் கூற்றியல் நிபுணர் திரு.செ.தனசெயன் அவர்களால் வழங்கப்பட்டு வந்துள்ளது. அதன் மீள் பரிசோதனை ஒன்று வவுனியா பொது வைத்திய சாலையில் உடற் கூற்றியல் பிரிவில் International Handicap நிறுவனத்தின் ஊடாக



உடற் கூற்றியல் நிபுணர் திரு. செலிஸ்டினோ தலைமையிலான குழுவினால் நடைபெற்றது. இம் 7 மாணவர்களும் கலந்து கொண்டு மேலதிக சிகிச்சையினைப் பெற்று கொண்டனர். இச்சிகிச்சையின் மூலம் மூளை மடக்கு வாதம் சிறுதலையினை உடைய ஜீவா ஜிதுசனுக்கு இரண்டு முழங்கால்களுக்கு இடையில் மணல் மூட்டையினை இடுவதற்கும், சோமசுந்தரம் சுலோஜினிக்கு விசேடகாலணி, கைகவசமும் குகனேசன் கிரேசிக்கு பாத வளைவினை ஏற்படுத்தும் காலணியினையும் வழங்கியுள்ளனர். இவர்களின் வேண்டுகோலுக்கு இணங்க SEED நிறுவனத்தின் ஊடான (V.S.O) Occupational therapites திரு ஜேம்ஸ் அவர்களால் உடலியல் மற்றும் உளவியல் ரீதியான மதிப்பீடும் செய்யப்பட்டிருந்தது.

### (ஈ) வருடாந்த விவேக ஈவு மதிப்பீடு

பயிற்சி நிலைய மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை, போஷாக்கு மதிப்பீடு, உடற் கூற்றியல் மதிப்பீடு போன்று உள சார்பான விவேக ஈவு மதிப்பீடும் வருடமுற்பகுதியில் வளவாசிரியர்களால் செய்யப்படுவது வழக்கம். இம்மதிப்பீடு மூலம் மாணவர்களின் குழு மாற்றம், கற்பித்தல் நுட்பங்கள் நிர்ணயிக்கப்படும் இவ்வருடம் ஜனவரி மாதமும் மாணவருக்கு விவேக ஈவு மதிப்பீடு நிலைய வளவாசிரியர்களால் செய்யப்பட்டிருந்தன.

### 3.2 தொடர் மருத்துவ சிகிச்சை

வருடத்தின் முற்பகுதியில் செய்யப்படும் மருத்துவப் பரிசோதனையினை அடுத்து மருத்துவரால் அடையாளம் காணப்பட்ட கடும் நோய் தாக்கத்திற்குரிய மாணவர்களுக்கான தொடர் மருத்துவச் சிகிச்சை ஒழுங்கு செய்யப்பட்டது. மாணவர்களை தொடர் கிளினிக் அழைத்து செல்லும் பொறுப்பினை அவர்களது பெற்றோர்களே பொறுப்பேற்றிருந்தனர்.

## தொடர் மருத்துவ சிகிச்சை அட்டவணை

| சிகிச்சை நிலையம் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| குழந்தை பிரிவு | 02 |
| E.N.T | 06 |
| தோல் | 02 |
| வலிப்பு | 06 |
| சாதாரண மருத்துவ பிரிவு | 05 |

### 3.3 உடல் கூற்றியல் பயிற்சி



உடல் கூற்றியல் நிபுணரால் இனங்கானப்பட்டு 07 மாணவர்களுக்கு கிழமையில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் வவுனியா பொதுவைத்திய சாலையில் பணிபுரியும் உடல் கூற்றியல் நிபுணர் திரு.பி.தனஞ்செயன் அவர்களால் அங்க அசைவுப் பயிற்சி வழங்கப்பட்டது.

### 3.4 போஷாக்கு உணவு வழங்கல்

மாணவர்கள் வீட்டிலிருந்து கொண்டு வரும் காலை உணவினை வள ஆசிரியர்களால் பரிசீலனை செய்யப்பட்டதோடு மைக்கினங்க, மருத்துவ ஆலோசனைப்படி.

01. அட்டவணைப்படி மதியஉணவு வழங்கல்.
02. 175ml பால் வழங்கல்.
03. பஞ்சபோசனம் வழங்கல் போன்ற நடவடிக்கைகள் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டன.

### 3.5 பேச்சு மொழி பயிற்சி வழங்குதல்

பேச்சில் இடர்பாடு உடைய 16 மாணவர்களுக்கு திருமதி மாரியம்மா சச்சிதானந்தம் பேச்சு பயிற்சி வழங்கியிருந்தார்.

## 4.0 சமூகப் புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடு

### 4.1 மாணவர் மன்றம்



மாணவர்கள் அவர்களது ஆற்றல்களை வெளிப்படுத்த தருணம் பார்ப்பவர்கள். அது மறுக்கப்படும் போது மனம் துன்பத்தில் துவண்டுவிடும். வழுவிழப்புடன் கூடிய மாணவர்களுக்கு இச் சந்தர்ப்பங்கள் ஏற்படுவது அதிகம். இதனை கருத்தில் கொண்டு எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கி ஆடல் பாடல், கதைகள் கூறுதல், விடுகதைகள் கூறுதல், தலைமைத்துவம் ஏற்கும் பண்பு ஆகியவற்றை மாணவர்களுக்கு பழக்கும் முகமாக மாணவர்மன்றம் ஒவ்வொரு மாதமும் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டுள்ளது.

### 4.2 சுற்றுலாக்கள்



மாணவர்கள் சூழலுக்குச் சூழல் வேறுபாட்டை உணர்வதற்கும், மனம் ஆனந்த நிலைஅடைவதற்கும் முக்கியமாக மனம் ஆன்மீக வழி இட்டுச் செல்வதற்கும் சுற்றுலாக்கள் முக்கியப்

படுத்தப்படுகின்றன. அந்த வகையில் இவ்வருடம் 24/10/09 அன்று மன்னார் மாவட்டத்திற்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு வலுவிழந்த சிறார்களுடன் பணிபுரியும் மாடப் நிறுவனத்திற்கும் பள்ளிமுனை அந்தோனியார் அலயத்திற்கும், தாழ்பாடி கடற்கரையையும் மாணவர்கள் பார்வையிட சென்றனர். 19/11/09 அன்று வவுனியா நகரசபை பூங்காவிற்கு சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு பூங்காவில் அன்றை நாளினை மகிழ்சியாக கழித்தனர்

### 4.8 வீட்டுத் தரிசிப்பு

பயிற்சி நிலையத்தில் வளவாசிரியர்கள் மாணவர்களுக்கு பயிற்சியினையும் மருத்துவத்தினையும் பொறுப்பேற்றுள்ளது போன்று பெற்றோர்களும் பிள்ளைகளின் பயிற்சி, சுத்தம், மருத்துவத்தில் அக்கறை உடையவராக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு, வளவாசிரியர்கள் ஒவ்வொரு வாரமும் 3 வது சனிக்கிழமை தவிர்ந்த ஏனைய சனிக் கிழமைகளில் வீட்டுத் தரிசிப்புக்களை மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம் வளவாசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இடையில் உறவு பலப்படுத்தப்பட்டிருந்தது.

### 4.4 பெற்றோர் கூட்டம்.




பயிற்சி நிலையத்தில் தனது பிள்ளையின் பயிற்சி நடவடிக்கை, மருத்துவம், பயிற்சி நிலைய செயற்பாடுகள், போன்ற வற்றை பெற்றோர் அறிந்திருக்க

வேண்டும்.என்ற காரணத்தினால் பெற்றோர்களையும் இணைத்து தலைவர் தலைமையில் வளவாசிரியர்கள் ஆகியோருக்கு மாதத்தில் 3வது சனிக்கிழமைகளில் காலை 9.30 இலிருந்து 12.30 வரை நடைபெற்றுள்ளன. இவ்வாறு 12 கூட்டங்கள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். சராசரி பெற்றோர் வருகை 35ஆக கணிப்பிடப்பட்டிருந்தது.

### 4.5 விளையாட்டுப்போட்டி

ஒரு குழந்தை உடல் ரீதியாக புத்துணர்ச்சி அடையும் போது அது உள ரீதியாகவும் புத்துணர்வு பெறுகின்றது. உடல் புத்துணர்வு பெறும் போது தனது செயற்பாடுகளில் செம்மை பெறுகின்றன. இதனை கருத்தில் கொண்டு பயிற்சி நிலையம் உடல் அப்பியாசங்கள், உடற் பயிற்சி, மற்றும் விளையாட்டுப் போட்டிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. அந்த வகையில்



ஒவ்வொருவருடமும் கொழும்பில் நடைபெறும் சன்சையின் கேம்ஸ் விளையாட்டுப் போட்டிக்கு நாட்டின் அசாதாரண நிலைமைக் காரணமாக செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. மற்றும் வழுவிழப்புடன் கூடிய சிறார்களும் விளையாட்டுப்போட்டிகளில் பங்கு பற்றி சான்றிதழினை பெற்று மகிழ்ச்சி நிலை அடைவதற்கும் பெற்றோர்களுக்கும் உளரீதியாக அமைதியும் மகிழ்ச்சியும் அடைவதற்கான ORHAN நிறுவனம் மாவட்ட மட்டத்தில் விளையாட்டுப் பேட்டியினை நடத்துவது வழக்கம். இந்நிகழ்வில் வழுவிழப்புடன் கூடிய சிறார்களுடன் பணியாற்றும் வவுனியா,

மன்னார், மாத்தறை ஆகிய 3 மாவட்டங்களை இணைத்து 19/09/09 20/09/09 ஆகிய இரு தினங்களும் வவுனியா நகரசபை மைதானத்தில் விளையாட்டுப்போட்டியினை நடத்தியது. இருதினங்களும் எமது பயிற்சி நிலையத்திலிருக்கும் 48 மாணவர்கள் பங்குபற்றி 107 பதக்கங்களை சுவீகரித்துள்ளனர். சென்ற வருடம்57 பதக்கங்கள் பெற்றமை குறிப்பிடத்த தக்க விடயமாகும். பதக்க விபரம் பின்வருமாறு.


| பதக்கம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| தங்கம் | 37 |
| வெள்ளி | 36 |
| வெண்கலம் | 34 |
| மொத்தம் | 107 |

**4.6 சைகை மொழி வழங்கல்**

விளங்கிக் கொள்ளல், வெளிப்படுத்தல் என்பது குழந்தைப் பருவத்தில் 1 1/2 மாதத்தில் ஏற்படும் மொழியாற்றல் ஆகும். என்றும் இந்நிலை மையினை அடைய முடியாத இரண்டு மாணவர்களுக்கு சைகைமொழி பயிற்சியாளர் மொழிப் பயிற்சியினை வழங்கி இரு பிள்ளை களுக்கிடையில் தொடர் பாடல் திறனை ஏற்படுத்தி வெளியிடங்களிலும் தமது மொழி தெரிந்தவர்களுடன் பிள்ளைகள் உரையாடக் கூடிய ஆற்றலை ஏற்படுத்தியுள்ளார்.



### 4.7 சமய நிகழ்வுகள்



மனதுக்கு ஆன்மீகம் என்பது செயலை நல்வழிப்படுத்தும் ஒரு மருந்து. மாணவர்களை ஆன்மீக வழியில் இட்டுச் செல்வதால் அவர்கள் மனம் குழப்ப நிலையில் இருந்து விலகி அமைதி நிலைக்கு செல்லும். அந்த வகையில் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக் கிழமை மாணவர்கள் தவசிகுள காளி கோயிலுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். அத்துடன் இவ்வருடம் சரஸ்வதி பூஜை 24/10/09 அன்று நிலையத்தில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் மாணவர்கள் கோலமிடுதல், மாலை கட்டுதல், போன்ற நிகழ்வில் வளவாசிரியர்களுடன் இணைந்து மகிழ்ச்சியாக கலந்து கொண்டனர்.

### 4.8 கலாச்சார நிகழ்வுகள்

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் உலகளாவிய ரீதியில் விசேடத் தேவைக்குட்பட்டோர் தினம் கொண்டாடப்படுவது வழமை அந்தவகையில் இவ்வாண்டுக்குரிய விசேடத்தேவைக்குட்பட்டோர் தினத்தினை 07.12.09 அன்று மிகவும் வித்தியாச மானமுறையில் ஒழுங்கு செய்திருந்தமைக் குறிப் பிடத்தக்க விடயமாகும். வவுனியாவில் இயங்கிவரும் பிரபல மகளீர்



பாடசாலையான வ/சைவப்பிரகாசா மகளிர்கல்லூரியில் பயிலும் சாதாரண மாணவர்களுடன் ஓஹான் நிறுவனத்தின் C.B.R மற்றும் புதுவாழ்வுப்பூங்கா பாடசாலை மாணவர்களையும் இணைத்து கலைநிகழ்வுகளை ஓஹான் நிறுவனம் ஒழுங்குசெய்திருந்தது. இந்நிகழ்வில் பயிற்சி நிலையத்திலிருந்து 48 மாணவர்கள் கலந்துகொண்டதுடன் 08 மாணவர்கள் கலைநிகழ்வினை வழங்கியிருந்தனர்.

### 4.9 பெற்றோர் சிரமதானம்

பெற்றோர்கள் பயிற்சி நிலைய வளர்ச்சியில் அக்கரை கொண்டிருப்பதனால் பயிற்சி நிலையத்தில் பெற்றோர் கூட்டங்கள் நடைபெறும் நாட்களில் சிரமதானங்களை ஒழுங்கு செய்துள்ளனர். இதன் பெறுபேறாக

1. பயிற்சி நிலைய சுற்றுச் சூழல் சுத்தமாக உள்ளது.

2. மாணவர்கள் சுதந்திரமாக கற்றல், விளையாட்டுக்களில் ஈடுபட உதவியுள்ளனர்.

3. பெற்றோருக்கு பயிற்சி நிலையம்மீது அக்கறை ஏற்பட்டுள்ளது.

## 5.0 பொருளாதார புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள்.

### 5.1 தொழிற் பயிற்சியளித்தல்

பெற்றோர்களின் அரவணைப்பில் இருக்கும் போது பிள்ளை அடிப்படைத்தேவைகளுடன் ஏனைய தேவைகளையும் பெற்றுக் கொள்ளும். அவர்கள் இல்லாத பட்சத்தில் பிள்ளை பிறரிடம் தங்கி வாழாமல் இருப்பதற்கு அவர்களுக்கு தொழில் சார் ரீதியான

பயிற்சிகளை வழங்கி எதிர்காலத்தில் இவர்கள் தமக்கென ஓர் தொழிலைப் பற்றிக் கொள்வதற்கு நிலையம் வழிசமைத்துள்ளது. தொழில் பயிற்சி அழிப்பதற்கு விவேக ஈவு அதிகம் உள்ள மாணவர்கள் தெரிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கடிதவுறை ஒட்டுதல், மெழுகுதிரி செய்தல், மணிகளில் மாலை கோர்த்தல் போன்ற தொழில் சார்ந்த பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.





# 6. பெறுபேறுகளும் – சவால்களும் – தீர்வுகளும்

## 6.1 பெறுபேறுகள் :

2009ஆம் ஆண்டு முழுவதும் நாம் மேற்கொண்ட முயற்சிகளின் பலாபலனாக சிறப்பான பெறுபேற்றை பெற்றுக் கொண்டோம் என்பதில் ஐயமில்லை. அவற்றுள் பின்வருவன சுட்டிக்காட்ட தகுந்தன.

1. எவ்விதத்திலும் வாழ்க்கைக்கு பயனற்றவர்கள் என கருதப்பட்டு வீடுகளில் முடக்கி வைக்கப்பட்டிருந்த 63 மாணவர்கள் வெளிக்கொணரப்பட்டிருந்தனர்.

2. 63 மாணவர்களுள் ஏறத்தாள 28 மாணவர்கள் தமது நாளாந்த கருமங்களை தாமே செய்ய கற்றுக்கொண்டுள்ளனர்.

3. தொடர் பயிற்சிகளின் ஊடாக 63 மாணவர்களின் விவேக ஈவுகள் ஓரளவுக்கேனும் முன்னேற்றம் அடைந்துள்ளது. சிறந்த முன்னேற்றத்தை காட்டிய மாணவர்கள் ஒரு குழுவிலிருந்து மற்றைய குழுவுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

4. விளையாட்டு, சுற்றுலா, வழிபாடு, கலாசார செயற்பாடுகள் போன்றவற்றினால் மாணவர்கள் சமூகப் பொருத்தப்பாடு அடைந்துள்ளனர்.

5. வீடுகளிலும், சுற்றாடலிலும் பாதுகாப்பு இடர்களை எதிர்நோக்கும் மாணவர்கள் 35 பேர் பயிற்சி நிலையத்தில் பாதுகாப்பு நிலைமையினை பெற்றிருந்தனர்.

6. குடும்பங்களுக்கு இம்மாணவர்களால் ஏற்றப்பட்டிருந்த சமூக, பொருளாதார சுமை குறைக்கப்பட்டிருந்தது.

7. குடும்ப மற்றும் சமூக அங்கத்தவர்களுக்கு இப்

பிள்ளைகளம் பெருமதிமிக்க பிரஜைகலே என்ற மனப்பாங்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

8. குடும்ப அங்கத்தவர்கள் இப் பிள்ளைகளுக்கு பயிற்சி அளிக்கும் முறைமைகளை கற்றுக்கொண்டதோடு பயிற்சி அளிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கும் ஏற்பட்டுள்ளது.

## 6.2 சவால்களும் - தீர்வுகளும்

இவ்வாண்டு நிலையம் எதிர்நோக்கிய சவால்களும் அதற்கு நாம் கண்ட தீர்வுகளையும் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

| இல. | சவால்கள் | தீர்வுகள் |
|---|---|---|
| 01 | உலக பொருளாதார நெருக்கடி | புதிய நிதி அனுசரனையாளர் (S.T.A) பெற்றுக் கொண்டமை |
| 02 | உள்நாட்டு இடப்பெயர்வு | அதிகரித்த மாணவர்களுக்கு அனுமதி அளிப்பதற்காக கீழ்கட்டுமான வசதிகளை மேன்படுத்தியமை |
| 03 | பெற்றோர்களின் ஒத்துழைப்பு இன்மை | பெற்றோர் கூட்டங்கள், வீட்டுதரிசிப்புகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டமை |
| 04 | போக்குவரத்து வசதிகள் மட்டுப்பாடு | பேரூந்துக்கு மேலதிகமாக நிறுவனத்தின் சிற்றூர்தி மற்றும் முச்சக்கர வண்டிகளையும், மாணவர்களின் போக்குவரத்திற்கு ஈடுபடுத்தியமை |

| இல. | சவால்கள் | தீர்வுகள் |
|---|---|---|
| 05 | ஆசிரியர் பயிற்சி பற்றாக்குறை | தவனை விடுமுறைகளில் பயிற்சி அளித்தலும் ஏனைய பயிற்சி பாடநெறிகளில் ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளலும். |
| 06 | மாணவர் அனுமதி கோரல் அதிகரிப்பு | மாணவர் எண்ணிக்கையை 60 ஆக நிலைப்படுத்தல் |

நன்றி

திருமதி. சாந்தினி கணேசமூர்த்தி (B.A.Hons)



ஏப்ரல் மாத பயிற்சி அட்டவணை தொடர்பான தகவல்கள்

**Training Schedule**

Training schedule for CBR Volunteers and Resource Teachers of Training Center for Mentally Challenged Children.

Date – 06.04.2009 – 22.04.2009.

Time – 9.00am -3.00pm

| No | Date | Topic | Under the budget line of | Venue | Resource Person | Designation | Institution |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 06.04.2009 | Play therapy | CIDA | ORHAN's training center for mentally challenged children | Mrs.Kema Uthayakumar | Trained Teacher | Sunera foundation |
| 02 | 07.04.2009 | Play therapy | CIDA | ORHAN's training center for mentally challenged children | Mrs.Kema Uthayakumar | Trained Teacher | Sunera foundation |
| 03 | 08.04.2009 | CBR concept and implementation | ORHAN | ORHAN's training center for mentally challenged children | Mrs.Vanijeyaparathy | CBR Coordinator | ORHAN |
| 04 | 17.04.2009 | Disable psychology | AJWS | ORHAN's training center for mentally challenged children | Mr.Ambikaipalan | Government counselor | Divisional Secretariat |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 05 | 18.04.2009 | Sports for disables | AJWS | Ukkulankulam RDS ground | Mr.T.Amalan | Sports officer | Divisional secretariat, Vavuniya |
| 07 | 20.04.2009 | Special education | ORHAN | ORHAN;s training center for mentally challenged children | Mrs.M.R.Yogan antham | Special education in service advisor | Zonal education office, Mannar |
| 08 | 21.04.2009 | Visual impairment | ORHAN | Eye unit general hospital, Vavuniya. | Dr.M.Malaravan | Eye surgeon | General hospital, Vavuniya |
| 09 | 22.f04.200 9 | Protection and PWD | Handicap Internatio nal | ORHAN;s training center for mentally challenged children | Mrs.Kavitha | Protectio n officer | Handicap Internation al |

ஆகஸ்ற் மாத பயிற்சி அட்டவணை தொடர்பான தகவல்கள்

**Training for CBR volunteers and Resource Teachers of Training Center for Mentally Challenged Children**

**Venue – Puthuvazhvupoonga – ORHAN's Training Center for Mentally Challenged Children**

**Close to SewaLanka farm, Thavasikulam,Vavuniya.**

**Date – From 10.08.2009 – 25.08.2009**

**Time - 9.00 am – 3.00pm**

| No | Date | Topic | Resource person | Institution | Supported by |
|---|---|---|---|---|---|
| 1 | 10.08.2009 | Psychosocial counseling for disables | Mrs.Sobana Santhirasekar | ORHAN | ORHAN |

டிசம்பர் மாத பயிற்சி அட்டவணை தொடர்பான தகவல்கள்

Training for CBR volunteers and Resource Teachers of Training Center for Mentally Challenged Children

Venue – Puthuvazhvupoonga – ORHAN's Training Center for Mentally Challenged Children

Close to SewaLanka farm, Thavasikulam, Vavuniya.

Date – From 10.12.2009 – 24.12.2009

Time - 9.00 am – 3.00pm

| No | Date | Topic | Resource person | Institution | Designation | Supported by |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10.12.2009 | Art for Disables | Mr.V.Inthiran | Saivappiragasha Ladies Collage | Teacher | ORHAN Srilanka U.K & S.T.A |
| 2 | 11.12.2009 | Handicraft | Mr.V.Inthiran | Saivappiragasha Ladies Collage | Teacher | ORHAN Srilanka U.K & S.T.A |
| 3 | 12.12.2009 | Field Visit | | | | |
| 4 | 14.12.2009 | Nutrition | Mr.Megaya | M.O.H Office Vavuniya | P.H.I | ORHAN Srilanka U.K & S.T.A |
| 5 | 15.12.2009 | Mental health | Dr.Suthakaran | S.T.D Clinic General hospital | Mental health specialist | ORHAN Srilanka U.K & S.T.A |
| 6 | 16.12.2009 | Eye Impairment | Dr.Malaravan Dr.Demiyan | General Hospital Vavuniya | Eye Sergeants | AJWS |

டிசம்பர் மாத பயிற்சி அட்டவனை தொடர்பான தகவல்கள்

Training for CBR volunteers and Resource Teachers of Training Center for Mentally Challenged Children

Venue – Puthuvazhvupoonga – ORHAN's Training Center for Mentally Challenged Children

Close to SewaLanka farm, Thavasikulam, Vavuniya.

Date – From 10.12.2009 – 24.12.2009

Time - 9.00 am – 3.00pm

| No | Date | Topic | Resource person | Institution | Designation | Supported by |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10.12.2009 | Art for Disables | Mr.V.Inthiran | Saivappiragasha Ladies Collage | Teacher | ORHAN Srilanka U.K & S.T.A |
| 2 | 11.12.2009 | Handicraft | Mr.V.Inthiran | Saivappiragasha Ladies Collage | Teacher | ORHAN Srilanka U.K & S.T.A |
| 3 | 12.12.2009 | Field Visit | | | | |
| 4 | 14.12.2009 | Nutrition | Mr.Megaya | M.O.H Office Vavuniya | P.H.I | ORHAN Srilanka U.K & S.T.A |
| 5 | 15.12.2009 | Mental health | Dr.Suthakaran | S.T.D Clinic General hospital | Mental health specialist | ORHAN Srilanka U.K & S.T.A |
| 6 | 16.12.2009 | Eye Impairment | Dr.Malaravan Dr.Demiyan | General Hospital Vavuniya | Eye Sergeants | AJWS |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 11.08.2009 | Psychosocial counseling for disables | Miss. V.Thiruvarudselvi | ORHAN | ORHAN |
| 3 | 12.08.2009 | Play therapy for children with disability | Mrs. Kema Uthayakumar | Sunera Foundation | CIDA |
| 4 | 13.08.2009 | Play therapy for children with disability | Mrs. Kema Uthayakumar | Sunera Foundation | CIDA |
| 5 | 14.08.2009 | Mobility (white cane )training for visual impaired persons | V.Subramaniam | ORHAN | ORHAN |
| 6 | 17.08.2009 | Disability and development | Miss. R.Suthangini | ORHAN | AJWS |
| 7 | 18.08.2009 | Disability and development | Mrs.Vanijeyaparathy | ORHAN | AJWS |
| 8 | 19.08.2009 | Explosive Remnants of war (ERW) | T.M.Kubais | Unicef | ORHAN |
| 9 | 20.08.2009 | Introduction to occupational therapy | Mr.James | VSO/ SEED | ORHAN |
| 10 | 21.08.2009 | Speech therapy | Miss.Kayathiry | Handicap International | ORHAN |
| 11 | 24.08.2009 | Mental health | Miss.M.Vanvili | ORHAN | ORHAN |
| 12 | 25.08.2009 | Mental health | Miss.M.Vanvili | ORHAN | ORHAN |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 17.12.2009 | Physiotherapy | Mr.Thananjeyan | General Hospital Vavuniya | Physiotherapist | ORHAN Srilanka U.K & S.T.A |
| 8 | 18.12.2009 | Yoga therapy | Mr.S.Chanthiran | S.K.Y.Foundation | Yoga therapist | ORHAN Srilanka U.K & S.T.A |
| 9 | 19.12.2009 | Field Visit | | | | |
| 10 | 20.12.2009 | Speech therapy | M/s. Kayathiry | General Hospital Vavuniya | Speech therapist | ORHAN Srilanka U.K & S.T.A |
| 11 | 21.12.2009 | General balance | Miss.Y.Thiruvarutselvi Mrs.Vanitha | ORHAN,Vavuniya SEED, Vavuniya | General officials | AJWS |
| 12 | 22.12.2009 | Sign Languet | Mr.Vinithaseelan Mr.Kirushnamenan Mrs.Jestinmery | SEED Vavuniya | Saint Languet Interpreters | ORHAN Srilanka U.K & S.T.A |
| 13 | 23.12.2009 | Sign Languet | Mr.Vinithaseelan Mr.Kirushnamenan Mrs.S.Jestinmery | SEED Vavuniya | Saint Languet Interpreters | ORHAN Srilanka U.K & S.T.A |
| 14 | 24.12.2009 | Brail Education | Mr.V.Supramaniyam | Zonal Education office, Vavuniya south | Special Coordinator | ORHAN Srilanka U.K & S.T.A |

# மதிய உணவு அட்டவணை

| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|
| சிவப்புக் | வெள்ளைநாடு | சிவப்பு கு.அரிசி | சிவப்பு கு.அரிசி | வெள்ளை நாடு |
| கு.அரிசி | பருப்பு | நெத்தலி | முட்டை | கத்தரிக்காய் |
| செமன் | கரட்/கீரை | உ.கிழங்கு | தக்காளி | கொண்டல்கடலை |
| பயிற்றங்காய் | சோயா | பெரியவெங்காயம் | பயிற்றங்காய் | பயறு |
| கீரை | தக்காளி | வாழைக்காய் | கீரை(வல்லாரை) | கீரை |
| | | கத்தரிக்காய் | | |
| | | கீரை | | |
| | | கரட் | | |

# பயிற்சி நேர அட்டவணை

| கிழமை | நேரம் | பாட வேளை | A | B | C | D |
|---|---|---|---|---|---|---|
| திங்கள் | 10.15 - 11.00 | 01 | எண் | யோகாசனம் | விளையாட்டு | எண் |
| | 11.00 - 11.15 | - | இடைவேளை | இடைவேளை | இடைவேளை | இடைவேளை |
| | 11.15 - 12.00 | 02 | எழுத்து | எண் | வீட்டுத்தோ.பரா | கைப்பணி |
| | 12.00 - 12.45 | 03 | யோகாசனம் | தையல் | எழுத்து | இசையும்அசைவும் |
| | 12.45 - 1.30 | 04 | விளையாட்டு | எழுத்து | எண் | வீட்டுத்தோ.பரா |
| செவ்வாய் | 10.15 - 11.00 | 01 | இசையும்அசைவும் | சித்திரம் | யோகாசனம் | எழுத்து |
| | 11.00 - 11.15 | - | இடைவேளை | இடைவேளை | இடைவேளை | இடைவேளை |
| | 11.15 - 12.00 | 02 | கைப்பணி | இசையும்அசைவும் | எழுத்து | யோகாசனம் |
| | 12.00 - 12.45 | 03 | சிறுகைத்தொழில் | விளையாட்டு | யோகாசனம் | இசையும்அசைவும் |
| | 12.45 - 1.30 | 04 | சித்திரம் | சிறு கை.தொ.ப | இசையும்அசைவும் | யோகாசனம் |
| புதன் | 10.15 - 11.00 | 01 | எண் | வீட்டுத்தோ.பரா | கைப்பணி | எழுத்து |
| | 11.00 - 11.15 | - | இடைவேளை | இடைவேளை | இடைவேளை | இடைவேளை |
| | 11.15 - 12.00 | 02 | தையல் | இசையும்அசைவும் | யோகாசனம் | சித்திரம் |
| | 12.00 - 12.45 | 03 | வீட்டுத்தோ.பரா | எண் | சித்திரம் | கைப்பணி |
| | 12.45 - 1.30 | 04 | தையல் | கைப்பணி | இசையும்அசைவும் | வீட்டுத்தோ.பரா |
| வியாழன் | 10.15 - 11.00 | 01 | இசையும்அசைவும் | யோகாசனம் | சித்திரம் | எழுத்து |
| | 11.00 - 11.15 | - | இடைவேளை | இடைவேளை | இடைவேளை | இடைவேளை |
| | 11.15 - 12.00 | 02 | எழுத்து | உடற்பயிற்சி | வீட்டுத்தோ.பரா | இசையும்அசைவும் |
| | 12.00 - 12.45 | 03 | எழுத்து | கைப்பணி | கைப்பணி | சித்திரம் |
| | 12.45 - 1.30 | 04 | விளையாட்டு | தையல் | எண் | விளையாட்டு |
| வெள்ளி | 10.15 - 11.00 | 01 | சிறுகைத்தொழில் | மனைவேலை | விளையாட்டு | எண் |
| | 11.00 - 11.15 | - | இடைவேளை | இடைவேளை | இடைவேளை | இடைவேளை |
| | 11.15 - 12.00 | 02 | யோகாசனம் | எழுத்து | இசையும்அசைவும் | விளையாட்டு |
| | 12.00 - 12.45 | 03 | TV | TV | TV | TV |
| | 12.45 - 1.30 | 04 | TV | TV | TV | TV |

## நன்றிகள்

எமது சாவல்களுக்கு முகம்கொடுப்பதற்கும், வெற்றிகரமான இலக்கை அடைவதற்கும் எமக்கு தோள் கொடுத்த அனைவருக்கும் எமது நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

1. நிதி அனுசரணையாளர்கள், நன்கொடையாளர்கள், நலன்விரும்பிகள்
2. ORHAN நிறுவன நிறைவேற்று குழுவினர்
3. ORHAN நிறுவன பணியாட்கள்
4. புதுவாழ்வுப் பூங்கா தலைமையாசிரியர், வளவாசியர்கள், கல்விசார் ஊழியர்கள்
5. புதுவாழ்வுப்பூங்கா பெற்றோர்கள், பாதுகாவலர்கள், மாணவர்கள்
6. ஆசிரிய பயிற்சிகள் வழங்கிய நிறுவனங்கள், வளவாளர்கள்
7. மருத்துவ புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்த வவுனியா பொது மருத்துவமனை வைத்தியர்கள், M.O.H அலுக உத்தியோகத்தர்கள்

மேற்குறிப்பிட்ட அனைவருக்கும் சிரம்தாழ்த்தி நன்றிகூற கடமைப்பட்டிருக்கிறோம்.

akash graphics

*digital imaging works*

digital banner & sticker printing

111 Bus Stand Complex, Vavuniya.
Tel. 024 2224965, Mob. 077 9001345
akashgraphics.lk@gmail.com / akashgraph@yahoo.com


akash graphics